செவ்வாய்க்கிழமை, 1980 ஜூலை 22.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி"

நல்ல முயற்சியுடனும் நிறைந்த அறிவுடனும் இடையறாது பணியாற்றுவதால் நாட்டின் குடிமக்கள் உயர்வு அடைவார்கள்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

பள்ளிகளில் 'கராத்தே' பயிற்சி.

* வினா எண் 31—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

பள்ளிகளில் மாணவர்களுக்கு 'கராத்தே' பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் உள்ளதா.?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : இவ்வமயம் இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கராத்தே பயிற்சி பாதுகாப்பிற்கான நல்ல பயிற்சி என்று சொல்கிறார்கள். குறைந்த பட்சம் பெண்களுக்காவது அந்த பயிற்சியை பள்ளிகளிலே கல்லூரி களிலே அளிக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இப்போது அப்படி ஒரு திட்டம் இல்லை.

திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அப்ரூவ்ட் கேம்ஸ்' என்ற பட்டியலில் அந்தப் பெயர் இல்லாமல் இருப்பதால், விளையாட்டு நேரங்களில் அதை ''கராத்தே'' பயிற்சி தருவதற்கு அனுமதிக்கப்படவில்லை என்ற விவரம் அரசுக்குத் தெரியுமா? அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் பள்ளி மாணவர், மாணவியருக்கு அந்தப்பயிற்சி அளிப்பது பற்றி பரிசீலனையில் இல்லாவிட்டாலும் கூட, அது நல்ல திட்டமாக இருப்பதால் வரும் காலத்தில் அந்தப் பயிற்சி அளிக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ளுமா? அடுத்து, எம்.எல்.ஏ.க்களுக்கு கராத்தே பயிற்சி அளிக்கும் திட்டத்தை அரசு கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்கள் அல்லது கல்லூரி மாணவர்களுக்கு இந்தப் பயிற்சியை பெறுகின்ற வாய்ப்பை ஏற்படுத்தித் தர முடியுமா என்பதைப் பற்றி அரசு சிந்திக்கும். எம். எல். ஏ.-க்களைப் பொறுத்தவரையில் அவர்கள் விரும்பினால் பயிற்சி பெறுவதற்கான இடம் சென்னையில் இருக்கிறது. இந்தியாவில் மிகச்சிறந்த கராத்தே நிபுணர் திரு. ஆர். வி. டி. மணி இங்கே பயிற்சிப் பள்ளி நடத்திக்கொண்டு இருக்கிறார். நீங்கள் பயிற்சி பெற ஆரம்பித்தால், அமைச்சர்களும் பயிற்சி பெற வேண்டி இருக்கும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, பெண்கள் சமீப காலத்தில் சமூக விரோதிகளால் தாக்கப்படுவதும், துன்புறுத்தப் படுவதும் போன்ற பல சம்பவங்கள் நடந்துகொண்டிருக்கின்றன இந்த நேரத்தில் சாதாரண வீட்டுப் பெண்கள் உள்பட எல்லோரும் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்கிற வகையில், அந்த இடத்திலேயே எதிரியை, தாக்கி தப்பித்துக் கொள்கிற முறையில், பெண்களுக்குப் பயிற்சி தரும் நிலையங்களை ஆங்காங்கு தனியாக 'மாஸ் ஸ்கேலில்' அமைக்க அரசு யோசிக்குமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தங்களுடைய தற்காப்புக்கு இதுபோன்ற பயிற்சிகள் தருவது நல்லது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் விரும்பிவந்து அவர்கள் பயில வேண்டும் என்ற நிலைமை இருந்துகொண்டு இருக்கிறது. ஆகவே, அரசைப் பொறுத்தவரையில் இதுபற்றி பரிசீலித்து மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

1980 ஜூலை 22]

திரு. மு. ப. முனுசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பள்ளிகளில் இருக்கும் விளையாட்டு ஆசிரியர்களுக்கு இந்தக் கராத்தே பயிற்சி தெரியுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, தற்போது பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு என்னென்ன தெரியும் என்ற விவரம் இல்லை. சில பேருக்குத் தெரிந்து இருக்கலாம். சிலபேருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

திரு. ப. நெடுமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்குக் கராத்தே பயிற்சி அளிப்பது பற்றி இங்கே உறுப்பினர்கள் கேட்டார்கள். வெளியாரால் தாக்கப்படுகிறபோது அதைப் பயன்படுத்தினால் பரவாயில்லை. குடும்பத்திற்குள்ளே ஏற்படும் தகராறில் கணவன்மார்களுக்கு எதிரான நிலையில் அதைப் பயன்படுத்தினால், அதற்கு பாதுகாப்புத் தரப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, குடும்பங்களிலே கூட தங்களைத் காத்துக்கொள்ளக்கூடிய நிலைமை ஒரு பெண்ணுக்கு ஏற்படக் கூடும்.

தேரெழுந்தூர் அருள்மிகு ஆமருவிப்பெருமாள் ஆலயம்

*வினா எண் 32—திரு. இரெ. இராசமாணிக்கம்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மாயூரம் வட்டம் தேரெழுந்தூர் அருள்மிகு ஆமருவிப் பெருமாள் ஆலய நிர்வாக அதிகாரி மீது பொதுமக்களிடமிருந்து புகார் மனு ஏதும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், மனுவின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு, ஆர். எம். வீரப்பன்: (அ) ஆம்.

(ஆ) அருள்மிகு ஆமருவிப் பெருமாள் ஆலயத்தின் செயல் அலுவலர் மீதான புகார்களின் மீது இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையரவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துள்ளார் அவ்வலுவலர் மாற்றப்பட்டு அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நாகை துணை ஆணையர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

திரு. இரெ. இராசமாணிக்கம்: தலைவரவர்களே, இந்த ஆமருவிப்பெருமாள் ஆலயத்தின் நிர்வாக அதிகாரியாகப் பணியாற்றியவர் பெயர் என்ன? அவர்மீது என்னென்ன குற்றங்கள்